# இலக்கியம்

## இலக்கியம் - விசேட மலர் 2014

பேராசிரியர் சபா ஜெயராசா
பேராசிரியர் எஸ்.ஜே. யோகராஜா
க. இரகுபரன்

மற்றும்

சு. முரளிதரன்
பதிப்பாசிரியர்

வெளியீடு
கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு

அனுசரணை
கலாசார அலுவல்கள் திணைக்களம்
அரச இலக்கிய குழு

இத்தொகுதியிலுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அனைத்துக்கும் அவ்வவ் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாகும்.
எவ்வகையிலும் அவை கலாசார அமைச்சினதோ.
கலாசார திணைக்களத்தினதோ,
அரச இலக்கிய குழுவினதோ பொறுப்பாகமாட்டா.

தலைப்பு : இலக்கியம்: அரச இலக்கிய விழா நிமித்தம் வெளியிடப்படும் விசேட மலர் 2014

பதிப்பாசிரியர் : எஸ். முரளிதரன்

வெளியீடு : கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு
8ம் மாடி, “செத்சிறிபாய”, பத்தரமுல்ல.

அனுசரணை : கலாசார அலுவல்கள் திணைக்களம்
அரச இலக்கிய குழு

அச்சு : பாஸ்ட் அட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
165, தேவானம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2682223

# புதிய நூற்றாண்டில் ஈழத்து வடபுலத் தமிழ்க் கவிதைகள்

**தி. செல்வமனோகரன்**

வருகைதரு விரிவுரையாளர்
இந்து நாகரிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

"கலைகளின் அரசி கவிதை" என்பார். கவிதை பழமையிலும் பழமையானது. அது வெறும் சொற்களோ, சொற்றொடர்களோ, பாக்களோ, யாப்புக்களோ அல்ல. சொற்களால் சொற்களை ஊடுருவித் துளையிட்டு வெறுவெளியுள் கலந்திடும் காற்று அது. ஒவ்வொருவருக்கும் தகுந்தாற் போல் அர்த்தப்பாடுகளைத் தருவது. "கல்லும் பிராணன் எடுத்து மேலெழுந்து பறந்தது" எனும் கவிதை வரியைப் போல கல் கவிதையாகும் கதையே கவிதைக் கலையின் கதை எனலாம். தமிழ்க் கவிதை தனக்கென ஒரு பாரம்பரியத்தைக் கொண்டிருப்பது போல ஈழத்தின் வடபுலமும் தனக்கெனத் தனித்துவமான தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தை உடையது.

இங்கு (வடபுலம்) என்னும் சொல்லால் குறிக்க முற்படுவது யாழ்ப்பாணமும் வன்னிப் பெருநிலமுமே. இப்பிரதேசத்தின் பதினான்கு வருட வாழ்வியற்புலத்தில் கவிதையின் போக்குக் குறித்து இங்கு ஆராயப்படுகின்றது. இந்நூற்றாண்டுக் கவிதைகளை நோக்கும் போது

சென்ற நூற்றாண்டில் எழுதப்பட்டு இப்போது தொகுக்கப்பட்ட கவிதைகளும் உள்ளன. அ. யேசுராசாவின் பனிமழை, சோ.பவின் தென்னிலங்கைக் கவிதைத் தொகுப்பில் சில கவிதைகள், கருணாகரனின் கவிதைகள், மனோகரியின் மழுங்கடிக்கப்பட்ட அடையாளங்களும்.., போன்றவற்றைச் சுட்டலாம். இது காலநதியின் ஓட்டத்தில் தவிர்க்க முடியாத செயற்பாடாகும். இந்நூற்றாண்டுக்கவிதைகளில் மரபுக்கவிதையின் செல்வாக்கு குறைந்தே காணப்படுகிறது. சோ.ப, பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம், த.ஜெயசீலன், போன்ற சிலரே இன்றும் மரபுக்கவிதைகளை எழுதி வருகின்றனர். புதுக்கவிதையே இந்நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்றுக்காணப்படுகின்றது. சுட்டிப்பாகக் கூறின் இளைய தலைமுறை (மரபுக் கவிதை) பற்றிய அறிவின்றியே அதனை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பது ஆச்சரியமான விடயமாகும்.

எண்பதுகளில் இருந்து ஈழத்தில் கவிதை மொழிபெயர்ப்பு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. M.A நுஃமானின் பலஸ்தீனக்கவிதைகளே மொழிபெயர்ப்புச் சார்ந்து தமிழில் வெளிவந்த முதற் கவிதைத் தொகுப்பு முருகையன், சோ.ப, அ.யேசுராசா போன்றோரும் இதில் ஈடுபட்டு வந்தனர். இந்நூற்றாண்டில் வெளிவந்த பனி மழை, (அ.யேசுராசா) ஆபிரிக்கக் கவிதை, தென்னிலங்கைக் கவிதை (சோ.ப) மிக முக்கியமான கவிதை மொழிபெயர்ப்பு நூல்களாகும். தொடர்ந்தும் சோ.ப பல கவிதை மொழிபெயர்ப்புக்களை பல சஞ்சிகைகள், பத்திரிகைகளில் எழுதிவருகின்றார். இவரைத் தவிர ந.சத்தியபாலன், தானா விஸ்ணு, சித்தாந்தன் போன்றோரும் மொழிபெயர்ப்பு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நூற்றாண்டில் வெளிவந்த வடபுலத்துக் கவிதைகளை உள்ளடக்க ரீதியாக இருவகைப்படுத்தலாம்.

1. யுத்தம் சார்ந்தவை/ அரசியல் சார்ந்தவை

2. யுத்தம் சாராதவை/ அரசியல் சாராதவை

இங்கு யுத்தம், அரசியல் என்னும் சொற்கள் ஒரு பொருட் சொற்கள் அல்ல எனினும் ஈழத்தில் இவை பிரிப்பற்ற சொற்களாகவே காணப்படுகின்றன. யுத்தம் சாராத கவிதைகள் குறைவாகவே வெளிவந்துள்ளன. (யுத்தம் நடை பெறுகின்ற போது அதைப் பற்றியே எழுதவேண்டும்) என்னும் சாரப்பட்ட கருத்துக்கள் புதுவை இரத்தினத்துரை போன்றோரால் முன்வைக்கப்பட்டமை இதற்குப் பிரதான காரணம் எனலாம். யுத்தம் நடந்த காலத்திலும் வடபுல வாழ்வில் காதல், கருணை, பசி, புணர்தல், அழகின் இரசிப்பு இருக்கத்தானே

செய்தது. ஆயினும் யுத்தம் சாராது வெளிவந்த கவிதைகளுள் பல வெறும் வரிகளாக, ஒற்றைத்தன்மை வாய்ந்தவையாகவே இருந்தன. யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் வெளிவந்த பல கவிதைகள் இதற்குச் சான்றாகின்றன. கு. ரஜீபனின் ஆரம்பகாலக்கவிதைகள் உதயனின் இடம் பெற்ற கவிதைச் சமர், உமாகரனின் கவிதைகள் போன்றவற்றை உதாரணத்திற்குச் சுட்டலாம். இன்றைய அச்சக மற்றும் பொருளாதார வசதிகளும் புகழ்நாட்டமும் இவ்வாறான மலினப்பட்ட கவிதைகள் அதிகமாக வெளிவரக் காரணமாக உள்ளன.

வடபுலத்திலிருந்து வெளிவந்த யுத்தம் சார்ந்த கவிதைகளைப் பின்வருமாறு எடுத்துரைக்கலாம்.

1. யுத்தம் - தமிழ்த் தேசியம்.

2. யுத்தத்தின் வலியும் வாழ்வின் துயரங்களும்

தமிழ்த் தேசியம் சார்ந்த உணர்வலைகளை, யுத்தம் சார்ந்த வீறார்ந்த உணர்வலைகளை ஏற்படுத்தும் நோக்கில் படைக்கப்பட்ட கவிதைகள் ஏராளம். "கவிதை" எனும் பெயரில் ஆக்கப்பட்ட கோஷங்கள், பிரசாரங்கள் ஏராளம். புதுவை இரத்தினதுரை, வேலணையூர் சுரேஷ, பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், பொன்.கணேஷமூர்த்தி என மேற்சொன்ன இரு தளக்கூறுகளிலும் வைக்கக்கூடிய கவிஞர்கள் பட்டியல் இன்னும் நீளும். இவற்றுள் பல பாடல்களாக, அரங்கக் கவிதைகளாக எனப் பல்வடிவங்கள் பெற்றும் உள்ளன. கருத்தியற் புலத்தில் விடுதலை வேண்டி நிற்கும் இனத்தின் குரலாக இவர்களால் கவிதை முன்வைக்கப்பட்டது.

இதேவேளை இறுதி யுத்தத்தின் பின் வடபுலக் கவிதைகளின் இக்குரல்கள் ஓய்ந்து போயின. யுத்தத்தின் முடிவும் இருப்புச் சார்ந்த கேள்விகளும் நெருக்கீடுகளும் இதற்குக் காரணங்களாகின்றன. ஒரு கட்டத்தில் யுத்தம் சார்ந்த - தமிழ்த் தேசியம் சார்ந்த குரல்கள் மாறுபட்டு யுத்தத்தின் வன் கொடுமைகளைப் பேசுகின்ற - யுத்தத்தை மேற்கொண்ட போராளிகளை நிராகரிக்கின்ற, இணங்கிப் போதலை வலியுறுத்துகின்ற கருத்தியல்களை உடையனவாக உருமாறுகின்றன. உண்மையான மனமாற்றம், இருப்புச் சார்ந்த அச்சம், தேவைகள் என இதற்குக் காரணங்கள் பல கற்பிக்கப்படுகின்றன. எது எவ்வாறு இருந்த போதிலும் ஒடுக்கப்பட்ட இனத்திற்கான குரலைத் திரிபுபடாது பார்த்துக் கொள்ள வேண்டியது கவிஞர்களின் ஏன் எல்லாத் தமிழர்களினதும் கடமையாகும்.

யுத்தத்தின் பின் வடபுலத்தில் வெளிவந்த கவிதைகளில் கணிசமானவை யுத்தத்தின் வலியை அந்த வாழ்வைப் பதிவு

செய்கின்றன. யுத்த பிரதேசத்திற்குள் அகப்பட்டவர்களாலும் அதற்கு வெளியே வாழ்ந்தவர்களாலும் இது சாத்தியமாகின்றது. யுத்த பிரதேசத்துள் அகப்பட்டு அந்த வாழ்வை வாழ்ந்து மறு ஜனனம் பெற்ற தானாவிஷ்ணு, கை.சரவணன், கிருபா, லிங்கேஸ் போன்றோர்களில் அதன் வலியைப் புரிந்து கொள்ளலாம். தானவிஷ்ணுவின் ஒரு சாம்ராச்சியம் - மூன்று நாய்கள், மூன்று நட்சத்திரங்கள், சிதறுண்ட காலக் கடிகாரம் எனப்பல கவிதைகளை (தொகுப்பு - கறுப்புருவம் சுமக்கும் ஆந்தைகள்) உதாரணங்களாகச் சுட்டலாம். யுத்தப் பிரதேசத்திற்கு வெளியே நின்று யுத்தத்தின் கொடூரத்தை - அதன் வாழ்வை கவித்துவமாக பா.அகிலன், சித்தாந்தன், கிருஷாந், பிரியாந்தி போன்றோர் பதிவு செய்கின்றனர். அகிலனின் சரமகவிகள் "சிதழூறும் வரிகளை" உடையவை. யுத்தப் பிராந்தியத்துக்கு வெளி நின்றவர்களாயினும் யுத்தத்தின் வலியை உணர்ந்தவர்கள் என்பதாலோ என்னவோ இவர்களின் வரிகளில் இரத்தம் கசிகிறது. இக்கவிதைகளில் வாழ்வின் இழப்பும் அலைவும் தீரா நெடுந்துயரும் சிறப்புற வெளிப்படுகின்றன.

இரத்த விளாறாய் கிடந்தான்
பாதித்தலை
பிளந்த நெஞ்சறையில் நூலிட்டு இறங்க
திரவமாய்க் கசிந்தது இருள்

(பிண இலக்கம் 178)

எனத் தொடரும் பா.அகிலனின் வரிகள் எமது நெஞ்சுக்குள் நூலிட்டு இறங்குகின்றன.

யுத்தத்தையும் தமிழ்த்தேசியத்தையும் ஆதரித்து ஏராளமான கவிதைகள் வெளிவந்துள்ளன. புதுவை இரத்தினத்துரை, நிலாந்தன், மு.பொன்னம்பலம், சு.வில்வரத்தினம், கருணாகரன், அம்புலி, முல்லைக்கமல், முல்லைக்கோணேஸ், யாத்திரிகன், சித்தாந்தன், தானாவிஸ்ணு, பா. அகிலன், த. அகிலன், தீபச்செல்வன், துவாரகன், எஸ்போஸ், கை சரவணன் போன்ற இன்னும் பலர் எழுதியுள்ளனர் எழுதிவருகின்றனர். புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் வீரார்ந்த சொல்லாடல்களும் வீச்சும் போர்முழக்கங்களும், (அடா) முதலான விளிப்புக்களும் நிறைந்த - அதீத நம்பிக்கை தருவனவாகவே காணப்படுகின்றன. இதன் சாயல் த. ஜெயசீலனின் கவிதைகளிலும் உள. போரியல் சார்ந்த கவிதைகள் எனும் தளத்திற்கு அப்பால் (கவிதை) என்ற பண்பியற்றளத்தில் நின்று ஆராயின் புதுவையின் ஒரு சில படைப்புக்களே கவிதைகளாகத் தேறும். மீதி, கோஷங்களால் நிரம்பி வழிகின்றன. பிரசாரத்தால் நீடித்த நெடி வீசுகின்றன.

யுத்தம் சாராத கவிதைகளிலும் வெறும் சொல்லடுக்குகள் நிறைந்த வார்த்தை ஜாலங்கள் நிறைந்த ஆக்கங்களைக் காணமுடிகிறது. இவையாவும் காலவெள்ளத்துள் காணாது போய்விடும்.

ஒரு நல்ல கவிதை என்பது சொற்களாற் புலப்படுத்தும் அர்த்தங்களை விட, சொற்களுக்கிடையே உள்ள வெளிகளால் மௌனங்களினால் கட்டமைக்கப்படும் போது அது பல் பரிமாணமுள்ளதாக மாறி விடுகின்றது. அதுவே கவிதையின் சிறந்த பண்பு என்றும் கூறலாம். வார்த்தைகளால் கவிதைகளை நிரப்புவதை விட சொற்சிக்கனத்தோடு அச்சொற்களைச் சரியான முறையில் ஒழுங்கமைக்கும் போதே நல்ல கவிதை ஒன்று உருவாக முடியும். (அது ஒரு முடிவில்லாத யாத்திரை. சொல்லிற் தொடங்கி சொல்லின்மையில் முடியுமொரு யாத்திரை) என பா. அகிலன் கூறுவது மனங்கொள்ளத்தக்கது. இவ்வாறான கவிதைகள் பல இக்காலத்தில் தோற்றம் பெற்றன.

(ஒரு பொய் வாக்கு மூலம்
ஒரு சதிச் செயல்
ஒரு மாணவன், ஒரு நண்பன்
உப்புப் பாத்திகளின் கீழ் சென்றன
இளமையின் ஈரிலைகள்)

(பா. அகிலன் செம்மணி – I)

இதே போல, விஸ்ணுவின் காலக்கடிகாரம் போன்ற பலவற்றை இதற்கு உதாரணங்களாகச் சுட்டலாம். சொற்களைப் பின்னும் முறைதான் கவிதையின் வெற்றியை, தரத்தை தீர்மானிக்கின்றது. கவிதை வெறும் சொற்களால் வரிகளால் கட்டமைக்கப்படுவதில்லை. அச்சொற்களுக்கும் வரிகளுக்கும் இடையே காணப்படும் தொடர்புக்கள் மற்றும் வீறார்ந்த வலு என்பனவற்றால் தீர்மானிக்கப்படுகின்றது. அவ்வாறான கவிதைகள் அப்பாலுக்கு அப்பாலாய் காலத்தை வென்றும் நிற்கக் கூடியவை ஆகின்றன. இவ்வாறான தரத்தை பா. அகிலன், தானா விஸ்ணு, சித்தாந்தன், நிலாந்தன் ஆகியோரிடம் பெரும்பாலும் காணமுடிகின்றது. ந. சத்தியபாலன், துவாரகன், அஜந்தகுமார் போன்றோர் நம்பிக்கை தருகின்றனர்.

அதேவேளை, இவ்வாறான இறுக்கமும் சொற்செட்டும், அவரவர் வரித்துக் கொண்ட கோட்பாடும் படைப்புக்களை இருண்மைக்குள் தள்ளிவிடுகின்றன. தரமான நல்லவாசிப்பனுபவம் உள்ள வாசகனால் கூட புரிந்து கொள்ள முடியாத படைப்புக்களாக அமைந்துவிடுகின்றன. மயூரரூபனின் கவிதைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இவ்வபாயம் விஸ்ணு, சித்தாந்தன் ஆகியோரின் கவிதைகளிலும் உண்டு. படைப்பாளி படைப்பை வெளியிட்ட பின் அது வாசகனுக்குரியதாகி விடுகிறது. குறைந்த பட்சம் சாதாரண வாசகனைத் தாண்டி ஒரு நல்ல வாசகனுக்காவது புரியும் தன்மை உடையதாக அமைய வேண்டும். அப்பொழுதே அது சிறந்த படைப்பாகும். (சொல் புதிது, சுவை புதிது) என்பதோடு எளிமையையும் இணைத்தே பாரதி நல்ல கவிதைக்கு இலக்கணம் சொன்னார்.

கருணாகரன், நிலாந்தன், ஸ்ரீபிரசாந்தன், கு.ரஜீவன், கை. சரவணன், அஜந்தகுமார், துவாரகன், போன்றோரின் கவிதைகளில் இவ்வெளிமையைக் காணமுடியும். கருணாகரனின் கவிதைகளில் அவரின் அவ்வவ் கால வாசிப்பு அனுபவத்தின் செல்வாக்கைக் காணமுடிகிறது. பசுவையா மற்றும் மனுஷ்யபுத்திரனின் தாக்கங்களை அவரது (ஒரு பயணியின் நாட் குறிப்புக்கள்) என்னும் கவிதைத் தொகுதியில் காணமுடியும். கு. ரஜீபனின்

நீண்டு கொண்டே போகிறது
இரவின் கொடிய இருட்டு
ஏதுமறியாக் குழந்தை போல
இன்னும் விழிபிதுங்கிய படியே இருக்கின்றோம்.
எமக்கான ஒரு பகல்
இன்னும் விடியவே இல்லை

(எமக்கான இருள் - கு.ரஜீவன்)

எனும் கவிவரிகள் எளிமையாய் கூற வந்ததை வாசகருக்கு புரியத் தக்கவகையில் கூறுகிறது. ஆனால் கு.ரஜீவன், ஸ்ரீபிரசாந்தன், கை.சரவணன் போன்றோரின் கவிதைகள் ஒற்றை அர்த்தத்தோடு ஒடிந்து போகின்றன. அவை வாசகனை சிந்திக்க - சிறகு விரித்துப் பறக்க விடுவதில்லை. தானாவிஸ்ணுவின் சிதறுண்ட காலக் கடிகாரம் வாசகனை பல்வேறு தளங்களுக்கு சிறகுவிரித்துப் பறக்கச் செய்கிறது. அவரவர் அனுபவப் புலத்திற்கு உணவிடுகிறது. அதுவே நல்ல கவிதையின் அடையாளமாகும்.

மிக அண்மையில் வெளிவந்த (மே 2014) “மயான காண்டம் - பிந்திய பதிப்பு” எனும் தொகுதி மிகுந்த கவனத்தைப் பெற்றுள்ளது. அதிலும் குறிப்பாக கிருசாந், பிரியாந்தி எனும் இரு இளம் படைப்பாளிகளின் கவிதைகள் வட புலக் கவிதைத் தளத்தை பிறிதொரு தளத்திற்கு நகர்த்திச் செல்கின்றன. கிரு'ாந்தின்

"நானே கைகளில் விலங்கிடப்பட்டவன்
நானே தெருக்களில் தனித்திழுபட்டவன்
நானே கடவுளரை மன்றாடித்தீர்த்தவன்
கைவிடப்பட்டவன்
நானே மகாமூர்க்கனும் புனிதனும் ஆனேன்
எனது சதையையே உண்டனர் பகிர்ந்தனர்
நானே மரணமும் சாட்சியுமாவேன்
................................
நானே தீயுள் சுடரும் காத்திருப்பு
நானே வார்த்தையுள் நெருடும் மறுதலிப்பு
நானே பூமியுள் உறங்கும் பெருவெடிப்பு
நானே எரியும் நிலமும் ஆற்றும் மழையும்
(நானொரு துயரம் நானொரு வாழ்வு)

எனும் கவிதை தத்துவார்த்தத் தளத்தில் பல வேறு தொன்மங்களை உள்ளடக்கியுள்ளதோடு சுயவிசாரணை - ஆத்மவிசாரணை எனும் தளத்தில் அசைகிறது. தனக்கான தத்துவார்த்த தளத்தை, தன்னைத் தேடுகிறது. நேர்த்தியான சொல் வைப்பு வாசனைப் பற்றுகிறது. அதேபோல,

"அங்கொரு ஜீவிதமுமற்று
அசைகிறது இலை
.......................
ஜீவதம் நிறைந்த அவ்வெளியில்
எங்குமற்று அலைகிறதொரு கண்ணின்
தனிமை விரட்டும்
பறவை"
(மூன்று அரசமிலைகள்)

என விரிகின்றது ஒரு கவிதை. குறியீடும், படிமமும் நிறைந்த இக்கவிதை வாசகனை தன்னுலகிற்குள் சஞ்சரிக்கவும் விரும்பிய இடத்தில் அமரவும் வைக்கிறது. இதேபோல நம்பிக்கை தருகின்ற இளங்கவிஞை பிரியாந்தி. அவரது அநாமிகா, ஆயிரமாவது இரவும் அடுத்து வந்த பகலும், துக்க உற்பத்தி மற்றும் துக்க நிவாரணம், நடந்த தடம், மயான காண்டம் - பிந்திய பதிப்பு போன்ற பல கவிதைகள் புதிய வாசக தளத்தை - புதிய கவிதா பாரம்பரியத்தை உருவாக்குவதற்குத் தகுதி உடையவை.

"துரோகத்தின் பசிய நிழல் படர்கிறது
சலித்துப்போன கனவொன்றின்

பழுப்பேறிய பிரதி மீது
...................
வரலாற்றில் நீண்ட மௌனத்தை
முன் ஏகிக் கடக்கும் பின்னொரு நாளில்
அவர்கள் அறியட்டும்
எந்த உண்மையும் உன்னை உயிர்ப்பிக்கவில்லை
என்பதை"

(மயான காண்டம் - பிந்திய பதிப்பு)

பிரியாந்தியின் சொல்வெளி மௌனங்களால் நிரம்பி வழிகின்றன. தமிழரின் துரோக வரலாற்றை மௌனத்தால் சுடுகின்றன. தம்மைத்தாமே ஆசுவாசப்படுத்திக் கொள்கின்றன. இறந்த காலத்தைக் கடந்து நிகழ்காலத்தில் பயணித்து எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர் கொள்கின்றன. இதேபோன்று கிருபா, லிங்கேஸ் போன்றோரின் கவிதைகளும், இவர்கள் இருவரும் நல்ல கவிதைகளைத் தரக்கூடியவர்கள் எனும் நம்பிக்கையைத் தருகின்றன.

அதேவேளை இளையதலைக்கவிஞர்களின் மொழிக்குறைபாடு படைப்புக்களை - அவற்றின் புலப்பாடுகளை குறைவுடையதாக்கி விடுகின்றன. தேர்ந்த சொற்களை கையாளுவதில் - அர்த்தப்புலப்பாடு உள்ளதாய் அவற்றை ஆக்குவதில் பலவீனப்பட்டு நிற்கின்றன. திணை, பால், எண், இடம், சார்ந்த இலக்கணக்குறைபாடுகள் பலரில் காணப்படுகின்றன. பழந்தமிழ் இலக்கியப்பரிச்சயம், விரிந்தவாசிப்பு என்பனவே இக்குறைகளைத் தீர்க்க உதவும்.

வடபுலத்தில் தோன்றிய கவிதைகள் போரின் வலியையும் வாழ்வையும் சுமந்து நின்றாலும் அதனையும் மீறி நம்பிக்கையோடு எழுகின்ற தமிழ்ச் சமூகத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன் விமர்சிக்கின்றன. வாசகனை புதிய தளத்திற்கு இட்டுச் செல்கின்றன. (வடக்கிருத்தல்) ஆகிப் போன வாழ்வில் இளங்கவிஞர்கள் பீனிக்ஸ் பறவையாய் சாம்பல் மேட்டில் இருந்து பூபாளம் இசைக்கிறார்கள். இசைக்கட்டும், பழமையிலும் பழமையான துயரத்தை, கவிதை, வடபுலத்தில் வாழ்கிறது.